**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 487** **நாள்: 18.09.2026**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், பட்டினம்பாக்கம் கடற்கரைப் பகுதியில் விநாயகர் சிலைகளைக் கடலில் கரைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (18.09.2026) மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், பட்டினம்பாக்கம் கடற்கரைப் பகுதியில் விநாயகர் சிலைகளைக் கடலில் கரைப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விநாயகர் சிலைகளை இப்பகுதியில் கரைப்பதற்கான முன்னேற்பாடுகளாக கிரேன்கள், ஜே.சி.பி. இயந்திரங்கள், ட்ராலிகள் உள்ளிட்ட இயந்திரங்கள் தயார் நிலையில் வைத்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள உயர் கண்காணிப்பு கோபுரங்கள், பாதுகாப்பு தடுப்புகள், உயர் மின் விளக்குகள், பொது ஒலிபரப்பு அமைப்புகள், காவல் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றினை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.தாகரே சுபம் தேவ்ராவ், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மயிலாப்பூர் காவல் துணை ஆணையர் திரு.வி.கார்த்திக், இ.கா.ப., மற்றும் மாநகராட்சி, காவல் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**